22nd September 1955]

Sri S. RAMALINGAM : " Drink more milk " அதிகப்படி பால் குடிக்க வேண்டுமென்று சர்க்கார் இப்பொழுது ஒரு கொள்கை வகுத்திருக்கிறார்கள். மேலும் மேலும் மக்களை உற்சாகப்படுத்துவதற்கும் பால் விற்பனையை அதிகரிப்பதற்கும் பால் விலையைக் குறைப்பதற்கும் விற்பனை வரியை எடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri M. A. MANI KAVELU : சாதாரணமாக பெருவாரியான ஜனங்களுக்குக் கிடைக்கிற பாலுக்கு விற்பனை வரி இல்லை.

Dr. K. B. MENON : Since the per capita consumption of milk in India is the lowest in the world and which is responsible for lack of health, will the Government consider making available milk at as low a price as possible by giving exemption to it from the sales tax?

The Hon. Sri M. A. MANICKAVELU : One difficulty is that even if the tax is removed, the price may not go down. The beneficiary may be only the milkman.

Sri S. RAMALINGAM : விற்பனை வரி சட்டத்தைத் திருத்தி பல பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிப்பது சர்க்கார் ஆலோசனையில் இருப்பதாகத் தெரிகிறது. அது என்ன ஆயிற்று ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அது இன்னும் சர்க்கார் ஆலோசனையில்தான் இருக்கிறது."

Sri A. RATNAM : சர்க்கார் ஆலோசனை முடிவடைவதற்கு எவ்வளவு நாள் பிடிக்கும்? வருஷம் ஒன்றுக்கு பாலுக்கும் தயிருக்கும் எவ்வளவு விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : முதல் கேள்வியைப் பொருத்தவரை கூடிய சீக்கிரத்தில் ஓரிரண்டு வாரத்தில் வியாபாரிகள் மகாநாடு கூடும். இரண்டாவது கேள்விக்கு நோட்டீஸ் வேண்டும்."

Sri S. SWAYAMPRAKASAM : The Hon. Minister has stated that even if the sales tax is removed, the private individuals may not reduce the price because of their profit-making motive. But the co-operative milk supply unions are public institutions and they are not interested in profit-making. So, will the Government come forward to exempt at least the co-operative milk supply unions from the sales tax?

The Hon. Sri M. A. MANICKAVELU : I referred only to small milk vendors when I stated that the removal of the sales tax will not be of real benefit to the consuming public. We have already lifted sales tax on so many articles. This proposal will also come up before the conference to be held shortly.

Sign-boards in Government Transport buses

* 2384 *Q.*—Sri M. MARIMUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the language in which the termini of Government Transport buses are written on them at present ; and

[22nd September 1955

(*b*) whether there is any proposal to write the boards in Tamil for the benefit of the general public?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) At present the destination boards on the top of Government buses are written in English.

(*b*) No, Sir.

SRI M. MARIMUTHU : தமிழில் பதில் தெரிவிக்கும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN: இப்பொழுது பஸ்களி லெல்லாம் போர்டுகள் ஆங்கிலத்திலே தான் எழுதப்படுகின்றன. தமிழிலே எழுதுவது பற்றி இப்பொழுது அரசாங்கத்தார் யோசிக்கவில்லை.

SRI S. RAMALINGAM : சென்னையிலே ஆங்கிலம் படிக்கத் தெரியாதவர்கள் பல லக்ஷக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். போர்டு களைத் தமிழில் எழுதுவதற்கு சர்க்கார் முன் வராததற்கு காரணம் என்ன ?

THE HON. SRI B. PARAMESWARAN : தமிழில் எழுதுவதற்கு முன் பக்கத்தில் இடமில்லை. பக்கங்களில் எழுதுவதுபற்றி யோசிக்கலாம்.

SRI A. RATNAM : ஆங்கில எழுத்துக்களை அழித்துவிட்டு தமிழில் எழுதுவதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : ஆக்க வேலையைப்பற்றி யோசிப்போம். அழிக்கும் வேலை செய்ய வேண்டாம், ஆங்கிலத்திலும் இருக்கட்டும். தமிழில் எந்த இடத்தில் எழுதுவது என்பது பற்றி யோசிப் போம்.

SRI K. ARANGANATHAN : ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் இடத்தில் தமிழில் எழுதிவிட்டு, தமிழில் எழுதப்போகிற இடத்தில் ஆங்கில த்தில் எழுத அரசாங்கம் முன் வருமா ?

THE HON SRI B. PARAMESWARAN : நான் சொன்ன பிரகாரம் தமிழில் எழுதுவது பற்றி அரசாங்கம் யோசனை செய்யும்.

SRI K. R. SAMBANDAM : பஸ்களிலே இப்பொழுது புறப்படும் இடம் போய்ச்சேரும் இடம் இரண்டும் எழுதப்பட்டிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளுவது கஷ்டமாக இருக்கிறது. போய்ச் சேரும் இடத்தை மாத்திரம் எழுதும்படி போக்கு வரத்து போர்டுக்கு அரசாங்கம் உத்தரவு செய்ய முன் வருமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அதைப்பற்றி யோசிப்போம்.

SRI S. DAIVASIGAMONEY : The Madras City being a cosmopolitan one, will the Hon. Minister consider putting the destination boards written in other languages like Malayalam and Kannada also when he proposes to put up boards written in Tamil?

THE HON. SRI B. PARAMESWARAN : I do not know whether we can at all have big boards like the cricket score-boards indicating the number of runs, etc. We have to limit the size of the board and it is quite sufficient if we limit it to Tamil only. Even that we have got to examine.

22nd September 1955]

SRI T. SHANMUGAM : அந்த போர்டுகளில் இனிமேல் ஹிந்தியிலே எழுத வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதா? (சிரிப்பு.)

THE HON. SRI B. PARAMESWARAN : சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்கவேண்டாம்.

SRI A. RATNAM : கனம் அமைச்சர் அவர்களை அழிக்கும் வேலை செய்யச் சொல்லவில்லை. போர்டுகளை ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழில் எழுதிப் பொருத்த வேண்டுமென்று தான் கேட்டுக் கொண்டேன். திருவண்ணுமலை பஸ்களில் ஹிந்தி எழுத்துக்களும் இருக்கின்றன. எதற்காக ஹிந்தியில் எழுதப்பட்ட போர்டுகள் பொருத்தப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : ஹிந்தியில் எழுதியிருப்பதுபற்றி சர்க்காருக்குத் தெரியாது. போர்டுகளைத் தமிழில் எழுதுவதற்கு முயற்சி செய்கிறேன்.

SRI S. PANCHAKSHARAM : நகரத்தில் எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். இவர்கள் பஸ்கள் எந்த வழிகளில் செல்கின்றன என்று தெரிந்து கொள்ளுவதற்கு சர்க்கார் வழி செய்யுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : பஸ்களில் ரூட் நெம்பர்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தந்த நெம்பர் பஸ் ஸ்டாண்டுகளில் அந்தந்த பஸ்கள் நிற்கின்றன.

Report of the Secondary Education Commission

* 2385 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government constituted any committee in 1954 to examine the recommendations of the Secondary Education Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir.

SRI N. K. PALANISAMY : சமீபத்தில் ஸிண்டிகேட் செகண்டரி படிப்பை 10 வருஷங்களிலிருந்து 11 வருஷங்களாக ஆக்குவதாக முடிவு செய்திருக்கிறது. இது பற்றி சர்க்கார் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது ஸிண்டிகேட் 'Pre-University Course' என்ற ஒரு வருஷப்படிப்பும் Degree Course-யை மூன்று வருஷ படிப்பாகவும் வகுத்திருக்கிறது. அதற்கும் செகண்டரி கல்விக்கும் சம்பந்தமில்லை.

Reconstitution of University bodies according to recommendation of Radhakrishnan Commission.

* 2386 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have sent a circular to this Government to amend the University Acts so as to reconstitute the Syndicate, the Senate and the Academic Council and other University bodies according to the recommendations of the Radhakrishnan Commission; and

(*b*) if so, the action taken thereon?